# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை,**
தேனாம்பேட்டை, சென்னை—18. தொலைபேசி 24357580

## வழக்கு எண். 39002 & 39546 / விசாரணை / 2008

## விசாரணை நாள் 30/09/2009

| | |
|---|---|
| முன்னிலை | திரு.ஜி. இராமக்கிருஷ்ணன், இ.ஆ.ப.,(ஓய்வு)<br>மாநில தகவல் ஆணையர்.<br><br>திரு. து.இரா.இராமசாமி, இ.ஆ.ப.,(ஓய்வு)<br>மாநில தகவல் ஆணையர்.<br><br>முனைவர் (திரு). ஆர்.பெருமாள்சாமி,<br>எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்..,டி.,<br>மாநில தகவல் ஆணையர். |
| மனுதாரர் | திரு.அ. அழவாக்கவுண்டன்,<br>8/66, பூசாரிக்காடு, கூத்தாடிபாளையம் ,<br>எருமைப்பட்டி கிராமம் & அஞ்சல் ,<br>எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்- 637 102. |
| பொது அதிகார அமைப்பு | 1. பொதுத் தகவல் அலுவலர்,<br>செயல் அலுவலர் அலுவலகம்,<br>சங்ககிரி பேரூராட்சி , சங்ககிரி, சேலம் மாவட்டம்.<br><br>2. பொதுத் தகவல் அலுவலர்,<br>உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அலுவலகம்,<br>சேலம் மண்டலம், சேலம் - 7. |

* * * * * * * * *

மனுதாரர் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக சேலம் மண்டல உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் சங்ககிரி பேரூராட்சியின் செயல்அலுவலர் ஆகியோர் இவ்வாணையத்தில் இன்று (30/09/2009) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் தனது 12.12.2008 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவில் பொது அதிகார அமைப்புகள், தான் கேட்ட தகவல்கள் இன்னும் சரியாக வழங்கப்படவில்லை என்றும், வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையற்ற தகவல்களாக இருக்கின்றன என்றும் கூறி, இவ்வாணையம் தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரி மனுச்செய்துள்ளார்.

மனுதாரர் சேலம் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களுக்கு 24.3.2008 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து 31.3.2008 தேதியிட்ட கடிதத்தின் மூலமாக சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிய அறிவுரைகள் வழங்கி, மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை வழங்க வேண்டும் என்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் படி, சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலரின் 16.4.2008 நாளிட்ட கடிதத்தின் மூலமாக சில தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் தனக்கு வழங்கப்பட்ட தகவல்கள் திருப்திகரமானதாக இல்லை என்று 26.4.2008 அன்று சேலம் மாவட்ட வருவாய் அலுவலருக்கு மேல்முறையீடு செய்துள்ளார். அந்த மேல்முறையீட்டு மனுவிற்கு, 8.5.2008 நாளிட்டு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் கொடுக்கப்பட வேண்டிய தகவல்களை மனுதாரருக்கு கண்டிப்பாக வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.6.2008 கடிதத்தின் மூலமாக விரிவான பதில் அனுப்பியுள்ளார். இவ்வாறு மனுதாரர் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மனுக்களை பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்து தான் கோருகின்ற தகவல்கள் முறையாக வழங்கப்படவில்லை என்று மனுச்செய்துள்ளார். இறுதியில், 12.12.2008 தேதிய இரண்டாம் மேல்முறையீட்டின் மூலமாக இவ்வாணையத்தை அணுகி உள்ளார்.

மனுதாரர் கோரியுள்ள தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கும் போது, கேட்கப்பட்ட 5 கேள்விகளில், கேள்வி எண். 1 மற்றும் 2க்கு ஏற்கனவே பதில் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. கேள்வி எண். 3, 4 மற்றும் 5க்கு சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று இவ்வாணையம் கருதுகிறது. ஆகவே, சங்ககிரி பேரூராட்சி பொதுத் தகவல் அலுவலர், இந்த ஆணை

கிடைக்கப் பெற்ற ஒருவாரகாலத்திற்குள் கேள்வி எண். 3, 4 மற்றும் 5க்கு உரிய தகவல்களை மனுதாரருக்கு வழங்கி, மனுதாரருடைய ஒப்புகையைப் பெற்று, இவ்வாணையத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்க ஆணையிடப்படுகிறது.

கேள்வி எண்.3, 4 மற்றும் 5 ஆகியவற்றிற்கு இதுவரையில் தகவல் வழங்காத சங்ககிரி பேரூராட்சியின் பொதுத் தகவல் அலுவலர் மீது, தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)ன் கீழ் ஏன் அபராதம் விதிக்கக் கூடாது என்பதற்கான சமாதானத்தை, பொதுத் தகவல் அலுவலர் இந்த ஆணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் இவ்வாணையத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

மாநில தகவல் ஆணையம்

ஒப்புதல் பெறப்பட்ட நாள்: 9-10-2009
ஆணையத்தின் ஆணைப்படி

(எஸ். மோகன தாஸ்)
உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். 39002 & 39546 /09</u>
**பொதுத் தகவல் அலுவலர்,**
**செயல் அலுவலர் அலுவலகம்,**
**சங்ககிரி பேரூராட்சி ,**
**சங்ககிரி, சேலம் மாவட்டம்.**

<u>வழக்கு எண். 39002 & 39546 /09</u>
**பொதுத் தகவல் அலுவலர்,**
**உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அலுவலகம்,**
**சேலம் மண்டலம், சேலம் - 7.**

<u>வழக்கு எண். 39002 & 39546 /09</u>
**பொதுத் தகவல் அலுவலர்**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**பாளையங்கோட்டை வட்டம்,**
**திருநெல்வேலி மாவட்டம்.**

<u>வழக்கு எண். 39002 & 39546 /09</u>
**திரு.அ. அழவாக்கவுண்டன்,**
**8/66, பூசாரிக்காடு, கூத்தாடிபாளையம் ,**
**எருமைப்பட்டி கிராமம் & அஞ்சல் ,**
**எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்- 637 102.**